[1974 மார்ச் 23

சுப்பிரமணிய பாரதியாருக்கு நினைவுச்சின்னம்.

* 573 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார்—நினைவாக எட்டயபுரத்தில் நினைவுச்சின்னம் ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எட்டயபுரத்தில் கவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த இல்லத்தை அரசு மாநில சின்னமாகக் கருதி தொல் பொருள் ஆய்வுத்துறையின் பராமரிப்பில் கொண்டு வந்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, பாரதியார் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக இப்பொழுது அரசாங்கம் எடுத்திருக்கிறது. பாரதியாருடைய கையெழுத்துப் பிரதிகள் அச்சேறாமல் இருந்தால் அவற்றையும், அவர்கள் எழுதிய நூல்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் சேகரித்து அந்த வீட்டிலே வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பாரதியார் பிறந்த இல்லம் இப்பொழுது தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவின் பராமரிப்பின்கீழ் வந்திருக்கிறது. நினைவுச் சின்னமாகக் கருதுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் கூறிய அத்தகைய பணிகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டிதான் வரும். அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. நினைவுச் சின்னமாக வரும் போது, பாரதியார் பயன்படுத்திய பொருள்களை எல்லாம் அவர்களுடைய குடும்பத்தினர் தருவார்களானால், அவற்றையெல்லாம் அங்கே காட்சிப் பொருளாக வைக்க ஏற்பாடு செய்யலாம்.

அவருடைய கையெழுத்து பிரதிகள் இருந்து அவற்றை தந்தால் அவற்றையும் அங்கே வைக்க ஏற்பாடு செய்யலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தேசிய கவி பாரதியார் உலக மகா கவி வரிசையிலே வைத்துப் போற்றப்படும் உயர்ந்த கவியாகத் திகழ்ந்ததால், அவருக்கு ஒரு சிறப்புச் சின்னம் அமைக்கும் அளவுக்கு அவர் பிறந்த இடத்திலோ அல்லது அவர் பிறந்த மாவட்டத்திலோ ஒரு கல்லூரியினை அவர் பெயரால் அமைக்க அரசு முன்வருமா?

1974 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.

மாமல்லபுரம், சித்தன்னவாசல் கோயில்கள்

* 574 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு கல்வி–சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரம், சித்தன்னவாசல் பகுதிகளிலுள்ள கற்கோயில்களை பராமரிக்கும் பொறுப்பை மேற்கொள்ளும் வகையில் மத்திய சர்க்காரிடம் கோரிக்கை ஏதேனும் மாநில சர்க்கார் விடுத்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. வை. பாலசுந்தரம்: மாமல்லபுரத்தில் ஆதிவராகன் என்ற ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோவிலை மத்திய அரசும் கைப்பற்ற வில்லை. மாநில அரசும் கைப்பற்றவில்லை. எந்த அரசாலும் பராமரிக்கப்படாமல் அந்தக் கோயில் சீரழிந்த நிலையில் இருக்கிறது. அந்தக் கோவிலில் மகேந்திரவர்மனின் முழு உருவம் செதுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டினுடைய ஒரு மன்னனுடைய முழு உருவம் செதுக்கப்பட்டிருப்பதால், அந்தக் கோவிலை பொதுமக்கள் பார்வைக்காக வசதி செய்யும்பொருட்டு, மாநில அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை எடுத்து பராமரிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாமல்லபுரம், சித்தன்னவாசல் இன்னும் இவைபோன்ற 118 வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் மத்திய அரசின் பராமரிப்பில் இருக்கின்றன. நாட்டிலுள்ள எல்லா கோவில்களையும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை. வரலாற்று சிறப்பு கொண்ட சில பல கோவில்கள் மாநில அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையாலும், மத்திய அரசு தொல்பொருள் ஆராய்ச்சித் துறையாலும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படும் மற்ற பல கோவில்களையும் பழமையான சின்னங்களையும் இந்தத் துறையினர் படி எடுத்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் பராமரிக்க வேண்டுமென்ற நிலை இல்லை: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோவிலும், அவ்வாறு ஆராய்ந்து பார்த்துவிட்டு, அவசியம் இல்லை என்ற காரணத்தினால் விடுபட்டிருக்கலாம். தனிக் குறிப்பு அனுப்பினால் விபரம் தரப்படும்.